# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசாரபீடம்

## முதலாம் வருடம் /இரண்டாம் அரையாண்டு கலைமாணித்தேர்வு (2015/2016)

## (May 2018)

## EC 1212 Fundamentals of Macroeconomics

நேரம்: 02 மணித்தியாலங்கள்

பகுதி ஒன்றில் இரண்டு வினாக்களுக்கும், பகுதி இரண்டில் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

---

### பகுதி I

01 அ வருமான வட்டப்பாய்ச்சல் என்ற எண்ணக்கருவை நான்கு துறை மாதிரியொன்றை அடிப்படையாகக்கொண்டு சுற்றோட்டப்படத்தில் விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ தேசியவருமானக் கணிப்பீட்டின் உள்ளடக்கப்படும் மற்றும் உள்ளடக்கப்படாத பொருளாதார நடவடிக்கைகளை பட்டியலிடுக.

(06 புள்ளிகள்)

இ சேமிப்பின் பல்வேறுபட்ட வகைகளையும் அவை கணிக்கப்படும் முறைகளையும் சுருக்கமாக விளக்குக.

(09 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

02 பின்வரும் சோடி எண்ணக்கருக்களை வேறுபடுத்தி விளக்குக.

அ சாத்தியவளவெளியீடும் உண்மைவெளியீடும்

ஆ. முதலீட்டுப் பெருக்கியும் வரிப்பெருக்கியும்

இ. எல்லைசேமிப்பு நாட்டமும் சராசரி சேமிப்பு நாட்டமும்

ஈ. பணக்கேள்வியும் பணநிரம்பலும்

உ. தொகைக் கடன் கட்டுப்பாடும் தெரிவுக்கடன் கட்டுப்பாடும்

(மொத்தம் 5*5=25 புள்ளிகள்)

03 அ கெயின்சின் மொத்தக்கேள்வி என்பதை அடையாளப்படுத்தி, அதன் கூறுகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ கெயின்சினது மூடிய மூன்றுதுறை மாதிரியொன்றின் தரவுகள் வருமாறு. (தொகைகள் மில்லியன் ரூபாவில்.)

நுகர்வுச்சார்பு 100 + 0.8YD, முதலீடு 50, அரசகொள்வனவு 20

(05 புள்ளிகள்)

i. சமநிலைத்தேசிய வருமானத்தைக் கணிக்க.

ii. அரசாங்கம் சுயாதீன வரியாகப் 10 மில்லியன் ரூபாவை அறிமுகம் செய்யுமாயின் தேசிய வருமானத்தின் புதிய சமநிலைமட்டத்தைக் காண்க? (T=10)

(05 புள்ளிகள்)

iii. அரசாங்கம் 10% வருமானவரியை சுயாதீன வரிக்கு மேலதிகமாக அறிமுகம் செய்து, (T=0.1Y) 05 மில்லியன் மாற்றல் கொடுப்பனவையும் வழங்குமாயின் (TR=5) தேசியவருமானத்தின் சமநிலை மட்டத்தைக் காண்க.

(05 புள்ளிகள்)

iv. இப் பொருளாதாரத்தில் அரசசெலவுப்பெருக்கி, மாற்றல் பெருக்கி, வரிப் பெருக்கி ஆகியவற்றைக் கணிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## பகுதி II

04 அ பணவீக்கம் என்பதை வரையறுத்து, அதன் வகைகளான கேள்வித்தூண்டல் மற்றும் செலவுத்தூண்டல் பணவீக்கங்களை வரைபடங்களோடு வேறுபடுத்திக் காட்டுவதோடு, பொருளாதாரமொன்றின் மீதான பணவீக்கத்தின் தாக்கத்தை உதாரணங்களோடு ஆராய்க.

(15 புள்ளிகள்)

ஆ. வணிக வங்கிகளின் பணவாக்கச் செயற்பாட்டைச் சுருக்கமாக விளக்கி, அதிலுள்ள வரையறைகளை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

05 அ முதலீடு என்பதை வரையறுத்து, அதன் வகைகள் மற்றும் அதனைத் தீர்மானிக்கும் காரணிகளைப் பட்டியலிட்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

ஆ வர்த்தகசகட ஓட்டம் என்பதை அடையாளப்படுத்தி, அதன் நான்கு கூறுகளையும் வேறுபடுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

06. வருமானம் வேலைவாய்ப்பு நிர்ணயம் தொடர்பான பழம் பொருளியலாளரது கருத்துக்களை, கெயின்சினது கருத்துக்களோடு வரைபட ரீதியாக ஒப்பிட்டு ஆராய்க.

(மொத்தம் 25 புள்ளிகள்)